PIRAS

ஓம்
சித்தி விநாயகாய நமஹ

மட்டுநகர் அமிர்தகழி

## கிரிமடு அருள்மிகு

## ஸ்ரீ சித்திவிநாயகர்

# காவடிச்சிந்து



ஆக்கம்:
விநாயகதாசர்
தம்பிஐயா ஜெகநாதசர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தா அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு ஒரு துளி நேரம்

கல்லாத மூடனுக்குங் கல்வி தரும் கற்றறிந்தோர்
எல்லாரு மனமகிழ விசைத்தமிழினியல்பு தரும்
நல்லாரை உறவாக்கும் நலந்தரு நன்னெறியுதவும்
பொல்லாத வினைதீர்க்கும் பொல்லாத குஞ்சரமே.

என்ற வருட்பாடலில் அசையாத நம்பிக்கையுடைய அடியேன், என் வாழ்வை வளமாக நடாத்தும் நாயகனாகிய சித்தி விநாயகன்மேல் சிந்துபாட சிந்தித்மையை எண்ணும் போது என் வீட்டு மோடு என்னை பார்த்து சிரித்தது. புரியாத தெரியாத, அறியாத ஒரு பெரு விடயத்தை முடிக்க ஆசைப் பட்டது இராமாயணத்தை தமிழிற் பாடிய கம்ப நாட்டாள் வாருக்கு அந்த ஆசை என்று கூற என் உள்ளம் மறுக்கிறது. கடலை நக்கிய பூனையாக அல்ல. அதன் மீசையாக கூட யானில்லை. ஏதோ எழுத வேண்டும் என்று எண்ணினேன். அவ்வளவுதான் சதுர்த்தியில் எழுத ஆரம்பிக்கப்பட்ட அச்சிந்து பாடல்கள் ஐந்து வருடங்கள் பல விதங்களில் சதிராடி இப்போ உங்கள் கைகளில் தவழ்கிறது. யாவும் சித்திதரும் புத்திதரும் செந்திருவைச் சேர்விக்கும், புத்திதருமெஞ்ஞானம் பாலிக்கும் கொத்தி யரிமுகனைக் காய்ந்த அருணேசர் தந்த கரிமுகனைக் கைதொழுத பலனே.

நலனே இஃது குலமிசை வலம்வர உளமார ஆசி நல்கி திருத்தங்களை செய்து வாழ்த்திய என் இதயத் தொன்றிய குருமார்களான மதிப்பார்ந்த சிவயோகச் செல்வன் ஐயாவுக்கும் விஸ்வப் பிரம்மஸ்ரீ காந்தன் குருக்கள் ஐயாவுக்கும் என்றென்றும் கடப்பாடுடையோனாகி நன்றி நவில்வதோடு இதனை வெளி யிட சகல ஒத்தாசைகளையும் புரிந்த அமிர்தகழி கீரிமடு ஸ்ரீ சித்திவினாயக தேவஸ்தான பரிபாலன சபையாருக்கும், அதிவி ரைவில் நல்லமுறையில் அச்சு வாகனமேற்றி அழகுறும் புத்தக மாக்கித் தந்த ஆனந்தா அச்சக உரிமையாளர் திரு. வை சுந்தரன் அவர்கட்கும், ஊழியர்களுக்கும் இதய பூர்வமான நன்றி யைச்சமர்ப்பித்து அவனருளாலே அவன் புகழ் பாடலை வைத்த சர்வ சித்திவினாயகர் பதமேத்தி இறைஞ்சி பிழைக்கை வீழினும் பாலன் கொள்வீர் என்ற சுந்தரர் திருவாக்கை அன்பர்களின் இதயத் திற்கு அர்ப்பணித்து ஆதரவை வேண்டுகிறேன்.

சிவத் தொண்டுக்குரிய
ஜெகன் ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

இந்து தர்மோதய ஸ்தாபகர், பிரம்மாதீன பீடாதிபதி,
உபன்னியாச ஜோதி, செஞ்சொற் கொண்டல்,
விஸ்வபிரம்மஸ்ரீ கண்மணிதாசன்

**Y. E. S. காந்தன் குருக்கள்**

அன்புநிறை ஜெகன் ஐயா அவர்கள் எழுதிய காவடிப் பாடலைப் பார்வையிட்டேன். பக்திரசம் ததும்பிய பாக்களாய் அமைந்தன. இப்பாக்கள் படிப்போர் தமக்குப் பரவசத்தை ஏற்படுத்தும் என்பது உண்மை. நற்குணமும், நற்பண்பும் ஒருங்கேயமைந்து தன்னை உயர்ந்த நிலைக்கு இட்டுச்செல்லும் ஜெகன் ஐயா அவர்கள் தான் அன்றாடாம் வழிபடுகின்ற சித்தி விநாயகப் பெருமானின் திருவருளால் மென்மேலும் பல பாடல்களை இயற்றி இறைவனின் கருணைக்கு அவரின் உள்ளம் பாத்திரமாக வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம் அன்புக்
காந்தன் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயவுரை

கதாகாலட்சேப கலாநிதி, சிவகரிகதாவாரி, முத்தமிழரசு
## சிவயோகச்செல்வன் சாம்பசிவம்

மொழியின் மறை முதல்வா முன்னயனத்தேறே
கழியவிரு பொருளே கண்ணே - தெழிய
கலாலயனே; எங்கள் சித்தி கணபதியேவுன்னை
கலாவு ஜெகனைக்கா.

பாவலான் ஒருவன் செந்தமிழ்க்கிரங்கி பரவையார் ஊடலை மாற்ற ஏவலாளாகி இரவெலாம் உழன்றவன் இறைவன். அந்த சித்தி விநாயகனை தமிழோடு இசைச்சிந்தால் ஆட்டுவிக்க நினைக்கிறது பூசா பூசணம். அதில் என்ன தப்பு என்பை பெண்ணுக்கியது இசைத்தமிழ்.
முதலை உண்ட மதலையை உயிர்பெறச்செய்தது இசைத்தமிழ்
அரவால் மாண்ட பாலனை எழுப்பியது இசைத்தமிழ்
பேசாத ஊமையைப் பேசுமாறு செய்தது இசைத்தமிழ்
மயிலுமாடி அதன்மீது அறுமுகனை ஆடி வருமாறு செய்ததும் அதே இசைத்தமிழ் கற்பொதுப்பில் காத்தாண்டதன்றோ அன்றியும் முத்தமிழ் சுவையைப் பருகுதர்காக நாலமிர்தச் சுவையீந்த நாயகனின் கோலம் தன்னை செந்தமிழ் சிந்துக் கோலத்தால் கோலம் செய்யப்படும் திருத்தலம் எது?

ஈழமணித் திருநாட்டில் ராமாயண கால நிகழ்வுகளை நினைவூட்டும் பகுதி உதயதிசையே. காலவெள்ளத்தால் இன்றும் அழிவுறாது தடையங்களும், தலங்களும் நிறைய கிழக்கிலங்கையில் திகழ்கின்றன அவற்றுள் ஈஸ்வரத்துமான மாமாங்கேஸ்வரத்துக்கு பாலவிநாயகன் போன்று, விடை கொடுத்து அனுப்பும் விகட கணபதியாக ஞானத்தருவின் நிழலில் அமர்ந்து தண்ணருளீபவர் கீரிமடு ஸ்ரீ சித்திவிநாயகர். பெருமானின் பேரருள் திறம் சொல்லும் திறமிலை. கடுகு சிறிது ஆனாலும் காரம் பெரிதென்பதுபோல் குச்சுமடாலயத்தமர்ந்து குஞ்சக்கன்று செய்யும் குறும்பு பலப்பலவாம். வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் பெருமானுக் கர்ச்சகராக தொண்டனாக தம்மையே அர்ப்பணித்த ஜெகன் ஐயாவின் அடக்கமான குழந்தை மனதான பக்திநெறிமிக்க பூசையை பேராலயங்களில் கூட தரிசிக்க இயலாதென்பது பலர் கூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி திரு சி. மௌனகுருவின் தந்தை திரு. இ. சின்னையா அவர்களின்பின் ஆலயத்தின் பூசைப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட அருளாளர் ஜெகன் ஐயா அவர்கள் தம்மை வழிநடாத்தும் பெருமான்மேல் சிந்திசைத் தமிழ் ஆரம்சூட்ட சிந்தித்ததின் விளைவே இத்திருநூல். காவடியாடிக் கசிந்துபாடி மெய்யடியார் மனதொடுங்கி மண்டியிட்டு முறையிடத்தக்க வகையாக இலகுவான சொல் நயத்தோடு ஆக்கிய காவடிச் சிந்தினைப் பாடிப்பார்த்தேன். அப்பப்பா ஆடிப்பார்க்க என்ன ருகில் காவடி இல்லை ஆனால் பாடல் ஒவ்வொன்றும் தேவடி காட்டும் திறன் மிக்கதாக அமைந்துள்ளது ஆனதால் காவடி ஜெகனை சிவகாளி எனப் பணிகின்றேன்.

மட்டக்களப்பு மண் கவிதை ஊற்றுக்கள் நிறைந்த திரு மண் கயலும் கவிபாட வயலும் வாழ்த்திசைக்க புயத்தில் ஏர்லயம்சூட்டும் நாடென்று கவியோகி சுந்தானந்த பாரதியின் பாராட்டிற்கு ஏற்றம் வைத்தது போன்று அமைந்துவிட்டது அன்பு ஜெகன் ஐயாவின் சிந்திசைப்பாக்கள். சித்தத்தில் சித்தி விநாயகனின் பெருமைகளையும் அடியார்களின் உள்ளக் குமிறல் களையும் தமிழ் பழம் பாடலை ஒத்ததாக அமைந்துள்ளது சிறப் பான அம்சம் எனலாம்.

காவடிச் சிந்துகள், லயச்சிந்து, தருச்சிந்து, காவியச் சிந்து, புள்ளொலிச்சிந்து என நால்வகையாக பண்டைய காலத்தில் வழக்கில் இருந்துள்ளன, தற்காலத்தில் மட்டுநகரி லேயே சிந்துப் பாடல்கள் நிறைவுண்டு எனலாம். மட்டக் களப்பு பிரதேசமெங்கினும் உள்ள இந்துக் கோயில்கள் ஒவ் வொன்றும் தனித்தனியான காவடி சிந்துகவிகளால் ஏத்திப் போற்றப்படுகின்றது. அவை காவியச் சிந்துவகையினுலான வையே அமைந்துள்ளது எனலாம். காவியச் சிந்துமுறையில் அனேகமாக பொருள், தலப்பெருமை, மூர்த்திவிசேடம் ஆட்சி புரியும். இவ்வகையாக மட்டக்களப்பின் வடபால் அருளாட்சி மிக்க அமிர்தகழி கீரிமடு ஸ்ரீ சித்திவிநாயகர்மேல் அமைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகன் ஐயாவின் காவடிச் சிந்துப்பாடல்கள் சில்த்தமிழை வளர்ப்பதோடு அடியார்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழி சமைக்கும் என்பதில் ஐயம் இல்லை. அவனருளாலே அவன்தான் இறைஞ்சிப்பாடிய இப்பாடல்களை ஆக்க காரண கர்த்தராக விளங்கிய சித்தி விநாயகன் ஐயாவுக்கு மேலும் கவிதா சக்தியை வழங்கி தண்ணருளால் சகல சௌபாக்கியங்களையும் நல்கு வாழுக. அடியார்கள் பாடல் புத்தகத்தை வேண்டி புத்தகத் தால் அருளூறும் கயமுகத் தண்ணல்பதம் போற்றி ஆலய வளர்ச்சிக்கு உதவி ஆன்ம ஈடேற்றம் பெற்றுய்வீர்களாக.

அன்பே சிவம் அதுவே சக்தி.

சிவப்பணிக்குரிய
**சிவயோகச்செல்வன் த. சாம்பசிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

சீரணைய மட்டு நகர் திகழ் சித்தி விநாயகர் மேல்
பேரணைய செந்தமிழால் காவடிசீர் சிந்துபாட
காரணைய யானை முக கற்பகமே அற்புதமே
நீரணைய உனது திரு கருணைமழை பொழிந்தருள்வாய்.

1. அரசமர நிழலருகில் கோயில் கொண்டு
அன்புடனே அடியார்கள் நித்தம் வந்து
கரசமலர் கரம் கூப்பிக் கண்ணீர் சிந்தி
கடி வினைகள் வாராமல் காக்கவென்று
பரவியுனைத் தினம் துதித்துப் பக்திசெய்து
பாடும் மெய்யடியார்கள் துயரம் தீர்க்க
வரமுதவ வந்தெமக்கு அருளே செய்வாய்
வளர்சித்தி விநாயகனே அருள்செய்வாயே.

2. ஆலயமோ சிறியதுதான் ஐயா உந்தன்
அற்புதமோ பெரிதென்று அடியார்போற்ற
வாலாயமாகவந்து கோயில் கொண்டு
வருபவரின் துயர்தீர்க்க ஆட்சிசெய்தாய்
காலை முதல் மாலை வரை கருதுகின்றோம்
காப்பதுவும் அருளல்லோ காளிமைந்தா
சீலமுடன் தெருவோரம் அமர்ந்த தேவே
சித்தி விநாயகனே வந்தருள் செய்வாயே.

3. இனிதோங்கு ஆடியமாவாசைதன்னில்
ஏற்றமுடன் மாமாங்கப் பதியைநோக்கி
கனிவுடனே வந்து சேரும் அடியார் எல்லாம்
காவலெனச் சந்நிதியிலே நிற்கும் உன்னை
கனி பால் தேன் அமிர்தமுடன் வைத்தே நித்தம்
கணபதியே காருமெனத் துதியேசெய்ய
தனியரசு மரநிழலில் கோயில் கொண்ட
சர்வ சித்தி விநாயகனே வந்தருள் செய்வாயே.

4. ஈசனுக்கு மூத்தவனே வாவா ஐயா
இதயமெல்லாம் அன்புருக வாவா ஐயா
பாசமுனக்கிலையோதான் எம்மைப் பார்த்து
பரதவித்து நாம் வாழ்தல் நியாயமோதான்
தேசமெல்லாம் சித்தி தரும் தெய்வவாசா
திகழ்ஞானப் பழம் உண்ட தேவ தேவே
நேசமுடன் அடியார் தொழ நேயமாக
நிறைசித்தி விநாயகனே வந்தருள் செய்வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உருகியுளம் நொடிந்துமிக வாடுகின்றேன்
ஊனின்றி உறக்கமின்றி உடல்தளர்ந்து
பெருகி கண்ணீர் பெரு வெள்ளம் போலும்
பேசயர்ந்தேன் உடல் சிலிர்த்தேன் கருணை வாழ்வே
கருதியுனைக் கனவிலும் நான் காணுகின்றேன்
கன்றிழந்த தாயதுபோல் கதறுகின்றேன்
தருணமிது தருணம் ஐயா சக்தி பாலா
கீரிமடு விநாயகனே அருள்செய்வாயே.

6. ஊதுகுழல் மாயவனின் மருகனான
உமைமகனே உம்பர் தொழு தம்பிரானே
மாது குறமகள் அணைய வழியேசெய்து
மணவாழ்வு தம்பிக்குச் செய்த தேவே
மாதாபிதா தன்னை வலமாக வந்து
மாங்கனியைப் பெற்று அருள் செய்த நாதா
ஏதுமறியேன் பாடும் தமிழைக் கண்டு
இரங்கி சித்தி விநாயகனே அருள்செய்வாயே.

7. என்ன வினை செய்தோமோ யாமறியோம்
ஈழமதில் தமிழர் படும் துன்பம் ஐயா
எந்நாளும் மரண இழியோலம் கேட்டும்
இரங்காயோ துலங்குமெழில் தும்பிக்கையா
முன்னவனே யானைமுக மூலத்தையா
முக்கணம்தன் திருமகனே சக்திமைந்தா
பொன்னகராம் கீரிமடுப் பதியில்மேவும்
புகழ்சித்தி விநாயகனே அருள்செய்வாயே

8. ஏதோ யான் முன்செய்த தவத்தினாலே
ஏழையெனை ஆண்டுகொண்டு அருளேசெய்தாய்
ஆதியிலே பாரதத்தை எழுதிவைத்தாய்
அடியார்கள் வாழ்வினிலே வளங்கள் செய்தாய்
ஆதாரம் உன்னையல்லால் யாருமில்லை
அடியேனை ஆண்டருள்வாய் ஆதிதேவே
பாதையருகரச மர நிழலில் வாழும்
பரசித்தி விநாயகனே அருள்செய்வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஐங்கரனே உனக்கபயம் அபயம் ஐயா
ஆனைமுகத்தேவே உனக்கபயம் ஐயா
சிங்கார உனது பெரு ஆட்டம் கண்டு
சிரித்திட்ட சந்திரனைத் தேயச் செய்தாய்
மங்களம் சேர் ஆவணி நற்சதுர்த்திதன்னில்
மனதுநிறை விரத விழா கண்டுகந்தாய்
துங்கமுயர் மட்டு நகர் வடபால் தோன்றும்
தூய சித்தி விநாயகனே வந்தருள்செய்வாயே.

10. ஒரு நாளில் திருவிழாவே செய்து வந்தார்
ஊரவர்கள் இன்றல்லோ பக்திகொண்டு
கருதியே பல நாட்கள் விழாவும் கண்டு
கருணை நிறை சதுர்த்தியிலே தீர்த்தமாடி
காலமெல்லாம் உனைத் துதித்துப் போற்றும் மக்கள்
பெரு வாழ்வுதான் வாழ்ந்து நிறைவுபெற்று
பேசரிய மங்களமும் பொங்கிப் பெருக
ஓம் சித்தி விநாயகனே வந்தருள்செய்வாயே.

11. ஓங்காரத் திருமுகமும் ஐந்து கையும்
உருவான பெருவயிறும் அகண்டகாதும்
பாங்கான சிறுகண்ணும் மோதகமும்
பார்ப்பதற்கே எந்நாளும் மகிழ்ச்சி ஐயா
தீங்கான பாவங்கள் எம்மைவிட்டுச்
சிதறிடவே ஓடிவந்தருளே செய்வாய்
நீங்காமல் எமையாள அரசநிழலில்
நிறைசித்தி விநாயகனே அருள்செய்வாயே.

12. ஔவைக்கு அருள்செய்து அழகுதமிழ் கேட்டாய்
அன்புடனே மூன்றுதமிழ் கொடுத்த தேவே
ஔவையவள் வேண்டிடவே கைலைதன்னில்
அரைநொடியில் சேர்ப்பித்த அழகுநாதா
கொவ்வையிதழ் பார்வதியாள் கந்தபாலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. குறை கறைந்து எமையாளும் சக்திருபா
எவ்வினைகள் வாராமல் என்றும் காப்பாய்
எம்சித்தி விநாயகனே வந்தருள் செய்வாயே.

13. இக்கணமே உனது திருப்பாதம் ஏற்றி
இருவேளைப் பூசையிலும் அடியார்கூடி
பக்தியுடன் உனது திருப்பாதம் போற்ற
பரவியருள் வரமுதவும் அரசநாதா
பக்தன் ஜெகன் அடியேன் நான் சொன்னபாடல்
பதிமூன்றும் உன்பதியில் பதிந்த பாடல்
தக்க புகழ் ஓங்கிடவே அருளைத்தாராயே
சுவாமி சித்தி விநாயகனே அருள் செய்வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1993ல்

## மட் / அமிர்தகழி

# கீரிமடு ஸ்ரீ சித்திவிநாயக

## தேவஸ்தான

# வருடாந்த அலங்கார உற்சவம்

எதிர்வரும் 14 8-93 ஆடி 30 சனிக்கிழமை

ஏகாதசி திதியில் திருவாதிரை நட்சத்திரம் கூடிய

சுபமுகூர்த்தத்தில் ஆரம்பமாகி

21-8-93 ஆவணி சதுர்த்தியில்

தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

மெய்யடியார்கள் அனைவரும் உற்சவகாலத்தில் கலந்து எம்பெருமானின் திவ்விய கடாட்சம்பெற்று உய்வீர்களாக.

தொண்டிற்குரிய
தேவஸ்தான பரிபாலனசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org